யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| நாடகமும் அரங்கியலும் - II | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2015) |
|---|---|---|

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) – 1 | 11) – 1 | 21) – 5 | 31) – 4 |
| 2) – 3 | 12) – 5 | 22) – 4 | 32) – 1 |
| 3) – 3 | 13) – 3 | 23) – 3 | 33) – 4 |
| 4) – 3 | 14) – 4 | 24) – 4 | 34) – 1 |
| 5) – 4 | 15) – 2 | 25) – 2 | 35) – 5 |
| 6) – 1 | 16) – 5 | 26) – 4 | 36) – 3 |
| 7) – 5 | 17) – 4 | 27) – 3 | 37) – 3 |
| 8) – 2 | 18) – 1 | 28) – 5 | 38) – 5 |
| 9) – 5 | 19) – 2 | 29) – 4 | 39) – 4 |
| 10) – 4 | 20) – 3 | 30) – 2 | 40) – 2 |

(1x40= 40 புள்ளிகள்)

### பகுதி II

1) 1) திருக்குற்றாலக் குறவஞ்சியின் கட்டமைப்பு 6 வகையாக பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது

1. கட்டியகாரன் வந்து பாட்டுடைத் தலைவனாகிய திரிகூடநாதரின் வருகை அறிவித்து நீங்குதல்
2. பாட்டுடைத்தலைவர் வருதல்
3. வசந்தவல்லி (தலைவி) வருதல்
4. குறத்தி வருதல்
5. சிங்கன் வருதல்
6. சிங்கன் சிங்கி சந்திப்பு

(5 புள்ளி)

2) நாயக்கமன்னர் காலங்களில் எழுந்த நாடக இலக்கியங்கள் பெரும்பாலும் எடுத்துரைப்பு பண்பு கொண்டனவாகவே காணப்படுகின்றன

1. கட்டியகாரன் பாத்திரம் இதில் முக்கியம் பெறுகிறது
2. ஒவ்வொரு பாத்திரமும் தமது பெருமையினை தாமே படர்கையில் அறிமுகம் செய்கின்றன எடுத்தும் கூறுகின்றனர்.
3. திருக்குற்றால நாதரின் உலாவருகை முதல் இறுதி வரை எடுத்துரைக்கும் பண்புடனேயே காணப்படுகின்றது
4. வசந்தவல்லி தோற்றம், குறத்தி வரகு, நூவன்வரவு தோழியர் புலம்பல் குறத்தியின் தோற்றம் குறத்தி மலை வளம் கூறல் என்பன உதாரணமாகும்.

(5 புள்ளி)

3) குற்றாலக் குறவஞ்சி நாடகத்தில் காணப்படும் பெருங்காட்சிப்பண்பு திருக்குற்றாலநாதரின் உலாவரும் காட்சியே முதன்மை பெறுகிறது

1. திருக்குற்றாலநாதரின் தோற்றம்
2. பவனியின் தோரனம்
3. எதிர்கொள்ளும் தேவர், மக்கள் கூட்டம்
4. அங்கு எழுப்பப்படும் ஒலிகள் என்பன பற்றி கூறி குறத்தியின் மலைவளம் கூறல் குறத்தியை உடல் முழுவதும் ஆபரணங்களுடன் கண்ற குறவனின் வியப்பு என்பவற்றையும் எடுத்துக் கூறுதல் வேண்டும்

(5 புள்ளி)

2) 1) தெய்வ நீதிக்கும் அரச நீதிக்கும் இடையே காணப்படும் போராட்டம்
(இதற்கான சம்பவத்தையும் விபரித்தல் வேண்டும்

2) பாத்திரத்தின் செயல்கள் ஊடாகவும் அவர்களுக்கிடையிலான மோதுகைகள், உரையாடல்கள் செயல்கள் என்பவற்றுக் கூடாகவும் அவலம் வளர்த்தெடுக்கப்படுகிறது

- அன்ரிக்கனி - கிறையோன் - தெய்வநீதி இறைநீதி
- கிறையோன் - ஏமன் - நீதியா கௌரவமா
- தெய்ரீசியாய் - கிறையோன் - சாஸ்திரம் நம்பாமை

சொல், செயல், நிகழ்வுகள் அனைத்தும் எழுத்துருவுக்கூடாக குறிப்பிடுதல் வேண்டும்.

(6 புள்ளி)

3) மூன்று பாத்திரங்களில் இயல்புகள் 3 குறிப்பிட்டு விளக்கினால் புள்ளி வளங்கவும்

(7 புள்ளி)

3) 1) இயல்பிற்கு ஒத்துவராத or தொடர்பற்றதாக or கருத்தற்றதாக or பொருத்தமற்றதாக அமையும் நிகழ்ச்சிகள் சம்பவங்கள் சொற்கள் என்பவற்றை அபத்தம் எப்போம் இதையே நாடகமாக நிகழ்த்தப்படும் போது அபத்த நாடகமாகிறது

- வாழ்வின் அர்த்தமின்மைகளை எடுத்துக் கூறும் மரபு வேறுபாடுகள்
- மொழிக் கையாழுகை அழிக்கைமுறை
- பாத்திர உருவாக்கம் முக்கியப்படுத்தப்படாமை
- பாத்திரம் எனும் எண்ணக்கரு கையாளப்படும் முறைமை

(5 புள்ளி)

2) **பொதுவர்**
பொதுமகன் ஒருவரைக் குறிக்கும் வகைமாதிரியில் பாத்திரம் எவ்வாறு ஏமாற்றப்படுகிறது என்பதும் அவருக்குப் பிரச்சனையாக அமையும் விடயமும் அதனைத் தீர்க்க அவர் மற்றவர்களை உதவிக்கு எதிர்பார்த்து அங்கலாய்பதும் மற்றவரல் இவர் இயலாதவர் எனகூற மனச்சோர்படைபவராக காணப்படுகிறார்

**புரொபசர்**
அதிகம் படித்த ஒரு விஞ்ஞானப் பேராசிரியரைக் குறிக்கும் வகைமாதிரிப் பாத்திரம் அது மேற்குறித்த பண்புகளை வெளிப்படுத்துவதை எழுத்துருவுக்கூடாக எழுதல் வேண்டும்

**சிவாயர்**
கடவுளின் பெயரால் மக்களை ஏமாற்றும் சமய வகைமாதிரிப் பாத்திர இப்பண்பை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதை பிரதியின் ஊடாக எடுத்துக் கூறுக (இவ்வாறு ஏதாவது 3 பாத்திரங்கள் பற்றி கூறுதல் வேண்டும்.

(5 புள்ளி)

3) **அபத்த நாடகத்தின் இயல்புகள்**
வகைமாதிரியான பாத்திரங்கள்
காரணகாரியத் தன்மை இன்மை
சொல்லிலும் செயலிலும் காணப்படும் முரண்பாடு
அர்த்தமற்ற ஆழமானதுமான மொழிப்பிரயோகம்
விரக்தி, சோர்வு நம்பிக்கையின்மை காணப்படுதல்
படிமங்கள் மரபுத்தொடர்கள் குறியீடுகள் ஊமப்பாங்கான செயல்களின் பயன்பாடு
மேற்குறித்த பண்புகளின் அபசுரம் நாடகபாடத்துடன் ஒப்பிட்டு கூறுதல் வேண்டும்

(5 புள்ளி)

4) **திருமறைக்கலாமன்றம்**

- 1965ம் ஆண்டு அருட்திரு மரியசேவியர் அடிகளால் ஸ்தாபிக்கப்பட்டது
- இயல், இசை, நாடகம், கூத்து வடிவங்களை அடுத்த தலைமுறைக்கு கொடுத்து வருகிறது
- இன்று வரை இயங்கி அரங்கப் பயில்வினை செய்து வருகிறது
- திருப்பாடுகளின் காட்சி நாடக மரபில் பல்வேறு பரிமானங்களைக் தோற்றுவித்து நீட்சியாக பேணிவருகிறது
- பாரம்பரிய கலைகள் இன்றும் ஆற்றுகைப்படுத்துவதுடன் ஆவணங்களைப் பதிவாக்கமும் செய்து வருகிறது
- நாடக கருத்தரங்கு, கண்காட்சி, வெளீயீடுகை போட்டிகள் நடாத்தி வருகின்றது
- ஊமநாடக மரவை வளர்த்து இன்றும் செயற்படுகிறது (போன்ற பலசெயற்பாடுகள் உள்ளன.)

(5 புள்ளி)

**நடிகர் ஒன்றியம்**

- 1970 ல் தேசிய மரபை தமிழ் மக்களிற்காக உருவாக்கும் முயற்சி
- நா. சுந்தரலிங்கம், தாசீசியஸ், சிவானந்தன், இளைய பத்மநாதன் மௌனகுரு போன்றவர்களால் உருவாக்கம் பெற்றது
- நெல்லியடி அம்பலத்தாடிகள் மட்டக்களப்பு நாடக சபா கூத்தாடி குழு இணைந்த தோற்றம் பெற்றது
- மரபுவழி நாடகங்கள் மோடிமை நாடகங்கள் அபத்தசாயல் நாடகங்கள் மொழி பெயர்பு நாடகங்கள் என நெறிப்படுத்தியமை
- நாடகப்பயிற்சி கலந்துரையாடல் நடத்தியமை
- பார்வையாளரிடம் நாடக ரசனையை அதிகரித்தமை

(5 புள்ளி)

**நாடக அரங்க கல்லூரி**

- 1979 ல் குழந்தை சண்முகலிங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டது
- சுயஆக்க நாடகங்களைத் தயாரித்தது
- நாடகப்பயிற்சி வகுப்பு கருத்தரங்கு நாடகப்பட்டறை நடாத்தியமை
- அரங்கம் சஞ்சிகை வெளியிட்டமை
- தரமான இரசிகர் குழாமை உருவாக்கியமை
- சிறுவர் நாடகம் பாடசாலை நாடகம் சமுக நாடகம் அரசியல் நாடகம் தயாரித்தமை

(5 புள்ளி)

**5)** 1) மட்டக்களப்பு மன்னார் முல்லைத்தீவு யாழ்ப்பாணம் மலையகம்
யாழ்ப்பாணம் :- வடமோடி, தென்மோடி, காத்தவராஜன், வசந்தன் கூத்து நாட்டை
இவை போன்று ஏனைய பிரதேசங்களிற்கும் எழுதுக. (5 புள்ளி)

2)

- கூத்து அவைக்காற்றப்படும் முறைமையிலும் அது உருவாகும் முறைமையிலும் அழகியல் அம்சம் காணப்படும்
- வட்டவடிவான மேடை அமைப்பு
- ஆற்றுவோர் பார்ப்போருக்கிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படும்
- வட்டக்களரியை சுற்றியிருக்கும் பார்வையாளரை மனங்கொண்டே அருவை அமைந்திருத்தல்
- பார்போரின் கற்பனையை தூண்டலுக்கு அதிக இடம் உண்டு
- நிகழ்த்துவோர் பார்போர் மனந்தளர்வாக இறுக்கமின்றி பங்குகொள்வர்
- வேட உடை ஒப்பனை, அணிகலன் இவற்றுடன் படைப்பாக்கம் என்பன கூறப்படலாம். (5 புள்ளி)

3)

- கூத்து உருவாக்கத்தில் ஒரு கிராம மக்களும் ஏனைய கிராமத்தவரும் ஒன்றிணைவர்
- மற்றவர் ஒன்று கூடி அண்ணாவியாரை தெரிவு செய்வர்
- கூத்து ஆடவிரும்புபவரை ஊருக்கு அறிவித்து தெரிவு செய்தல்
- சட்டம் கொடுக்கும் நிகழ்வில் ஊர் பொதுமக்கள் ஒன்று கூடுவர்
- கிராம மக்கள் மத்தியில் தினக்கூத்து இடம் பெறும்
- சதங்கை அணிதல் தினக்கூத்து அடுக்குப்பார்த்தல் பணக்கூத்து என்பதில் மக்கள் ஒன்று கூடுவர்
- கிராமத்தில் காணப்படும் பல்வேறு சமூகப்பிரிவுகளையும் ஒன்றினைக்கும் வகையில் அளிக்கை காணப்படும் (5 புள்ளி)

**4)**

- வசந்தன் கூத்து - கோலம நாடகம
- இரண்டும் சமதளமான வட்ட மேடையில் ஆடப்படுகிறது
- இரண்டுக்கும் தனிக்கதை இல்லை ஆயினும் எழுத்துப்பிரதி உண்டு
- இரண்டிலும் பாத்திரத்தின் தன்மைக்கேற்ப மென்மையான கடினமான வேகமான ஆடல்கள் உண்டு
- இரண்டிலும் ஜாதகக் கதைகள் காணப்படுகின்றன
- கோலத்தில் முகமூடியும் வசந்தனில் முக ஒப்பனையும் உண்டு
- கோலம் நாடகத்தில்:- பறைதட்டுபவன் படைவீரன் முதலியார் டச்சுத்தம்பதியர், வேட்டைக்காரர்கள் ஆண்டி போன்ற மனித பாத்திரமும் வசந்தன் கூத்தில் வேடர் குறவர் கப்பல்காரர் பள்ளன், பள்ளி பாத்திரங்கள் காணப்படுகின்றனர்.

(5 புள்ளி)

**மகுடி கூத்து - சொக்கரி நாடகம்**

- இரண்டிலும் ஆடல் கூத்து வரும் குழுவிற்கும் இங்கிருக்கும் குழுவிற்கும் இடையிலான மந்திரதந்திர போட்டியாகும்
- இரண்டின் ஆரம்பக் கதைகள் வாய்வழிக்கதையாகவே காணப்படுகின்றது
- செக்கரி குருசாமிக்கும் மட்டக்களப்பு பிராமணனுக்கும் ஒரே தன்மையான அசட்டு வேலையள் உண்டு
- இரண்டும் நகையுணர்வும் அங்கதச் சுவையும் நிறைந்த நாடகமே
- இவ்வரங்க செயற்பாட்டில் பார்வையாளர்கள் பங்கு பெறுவர்
- இடம்பெயர் ஜதீகக்கதை என கூறுவர்
- இரண்டும் காளியம்மாள் எனும் பெண்தெய்வத்துடன் தொடர்புடையது.

(5 புள்ளி)

**தமிழ் கூத்து – சிங்கள நாடகம்**

- இரண்டும் பாரம்பரிய ஆற்றுகை வடிவம்
- கூத்தில் அண்ணாவியார் போன்று நாடகமவில் பெத்தேகுரு
- இரண்டும் இரவு முழுவதும் ஆடப்படும்
- இரண்டும் திறந்த வெளியில் நிகழ்த்தப்படும்
- இசைக்கருவியில் இரண்டிலும் தொடர்பு காணப்படுகிறது
- நாட்டார் பாவினங்களி பயன்படுத்தப்படுகிறது
- கிறீஸ்தவக் கதைகள் அதிகமாக இடம்பெறுகிறது

(5 புள்ளி)

The National e-learning Portal for The General Education